DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)
IN THE COURT OF ASSISTANT SESSIONS , MANNARGUDI
**Sessions Case No. 129/2013**

(Preliminary Register :- 7/2010 )
Deposition of Witness அ.சா. 1 ன் வாக்குமூலம்

Prosecution Witness No.1

| NAME: | மஞ்சுளா | Husband NAME: | பக்கிரிசாமி |
|---|---|---|---|
| VILLAGE: | அதங்குடி | TALUK: | கூத்தாநல்லூர் |
| CASTE: | | CALLING: | வீட்டுவேலை |
| RELIGION: | | AGE: | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 21.10.2024

**முதல் விசாரணை** :-

நான் மேலே கண்ட முகவரில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுவேலை செய்து வருகிறேன். பக்கிரிசாமி எனது கணவர் அவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் . நான் கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் அளித்த புகார் தொடர்பாக என்ன தெரியும். எதற்காக புகார் அளித்தேன் என்றால் எனது கணவரை சேகர் என்பவர் வெட்டியதாக புகார் அளித்தேன். கடந்த 22.10.2009 ல் காலை 7.15 மணியளவில் சேகர் வீட்டுவாசலில் வைத்து எனது கணவர் குளித்து விட்டு வரும்போது அருவாள் வைத்து வெட்டினார் எனது கணவரில் இரண்டு தோல்பட்டையில் வெட்டியும் மற்றும் அருவாளால் முதுகில் கொத்திவிட்டார். எதிரி அருவாளார் வெட்டும் போது செல்வம் , ராதா நேரில் பார்த்தார்கள் சத்தம் கேட்டு ஐய்யப்பன் ஓடிவந்தார். என் கணவரை வெட்டியதை பார்த்து நான் சத்தம்போட்டு கத்தினேன் . சத்தம் கேட்டு ஊரில் உள்ள அனைவரும் வந்தார்கள். எதிர் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார் . காயம்பட்ட எனது கணவரை ஐயப்பனின் பைக்கில் வைத்து அழைத்து சென்று கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். மேல்சிகிச்சைக்காக மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்த்தோம். பின்பு அங்கிருந்து மேல் சிகிச்சைகாக தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். என் கணவர் எதிரியின் மனைவியோடு தொடர்பில் இருப்பதாக சந்தேகப்பட்டு எதிர் வெட்டினார். மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்கையில் இருக்கும்போது பேச்சு மூச்சு இல்லாமல் இருந்ததால் நான் புகார் வாக்குமூலம்

அளித்தேன் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அ.த.சா. ஆ. 1 ஆகும் . என்னிடம் காட்டப்படும் அருவாளால் தான் எனது கணவரை எதிரி வெட்டினார் அருவாள் சா.பொ.1ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.25 18:07:46 +0530

சார்பு நீதிபதி ,

மன்னார்குடி.